

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.10.2025) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து விளையாட்டு உபகரணங்களை வாங்குவதற்காக 8 விளையாட்டு வீராங்கனைகளுக்கு தலா 30,000 ரூபாய் வீதம் மொத்தம் 2.40 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

# நீலகிரி மாவட்டத்தில் - 4வது புத்தகத் திருவிழா!

## அரசு கொறடா கா.ராமச்சந்திரன் தொடங்கி வைத்தார்!

*நீலகிரி, அக். 26 -*

நீலகிரி மாவட்ட நிர்வாகம், பொது நூலகத்துறை மற்றும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர், பதிப்பாளர் சங்கம் இணைந்து நடத்தும் 4வது புத்தகத் திருவிழாவினை அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், புத்தக அரங்குகளை திறந்து வைத்து பார்வையிட்டு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் 2000 பள்ளி மாணவ, மாணவிகள் பயன் பெறும் வகையில் தலா ரூ.150 மதிப்பிலான இலவச கூப்பன்களை வழங்கும் அடையாளமாக 10 மாணவ, மாணவியர்களுக்கு வழங்கினார்.

நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், மாவட்ட நிர்வாகம், பொது நூலகத்துறை மற்றும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர், பதிப்பாளர் சங்கம் இணைந்து நடத்தும் 4வது புத்தகத்திருவிழாவினை, அரசு தலைமைக்கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், நேற்று முன்தினம் (24.10.2025), புத்தக அரங்குகளை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்த புத்தக திருவிழாவில், புத்தக அரங்குகள், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்ட கண்காட்சி அரங்குகள், உணவு அரங்கங்கள் என 75க்கும் மேற்பட்ட அரங்குகள் பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், சுற்றுலா பயணிகள் பயன்பெறும்; வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்விழாவில், அரசு தலைமைக் கொறடா தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பள்ளி, கல்லூரி, மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரிடமும் புத்தக வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில், அனைத்து மாவட்டங்களிலும் புத்தக திருவிழா நடத்த வேண்டும் என அறிவித்ததின் அடிப்படையில், நீலகிரி மாவட்ட நிர்வாகம், பொது நூலகத்துறை மற்றும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர், பதிப்பாளர் சங்கம் இணைந்து நடத்தும் 4வது புத்தகத்திருவிழா இன்று முதல் தொடங்கி, வருகின்ற நவம்பர் 2 ஆம் தேதி வரை சிறப்பாக நடைபெறவுள்ளது. இந்த புத்தக திருவிழாவில், போட்டி தேர்வுகளுக்கான புத்தகங்கள் மற்றும் பல்வேறு கதைகள், சொற்பொழிவுகள் உள்ளிட்ட புத்தகங்கள் இடம் பெற்றுள்ளது. சிறியவர்கள்; முதல்; பெரியவர்கள் வரை அனைவரும் படிக்கும் வகையில் இந்த புத்தக திருவிழாவில் பல்வேறு விதமான புத்தகங்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளது. அனைத்;து விதமான புத்தகங்களும் கிடைக்கும் ஒரே இடமாக இந்த புத்தகத் திருவிழா இடம் பெற்றுள்ளது. ஒவ்வொருக்கும் எது தேவைபடுகிறதோ அந்த புத்தகங்களை வாங்கி படித்து, அதன் மூலம் தங்களது அறிவு திறனை வளர்த்து கொள்ள முடியும்.

இந்த புத்தக திருவிழாவில், தமிழகத்திலுள்ள சிறந்த பேச்சாளர்கள், நீலகிரி மாவட்டத்தில் உள்ள கவிஞர்கள், பேச்சாளர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளதால், பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், சுற்றுலா பயணிகள் அனைவரும் இந்த புத்தகத்திருவிழாவிற்கு வருகை தந்து, புத்தகங்களை வாங்கி பயன்பெறுமாறு அரசு தலைமைக் கொறடா அவர்கள் தெரிவித்தார்.

பின்னர், அரசு தலைமைக்கொறடா அவர்கள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் 2000 பள்ளி மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் தலா ரூ.150 மதிப்பிலான இலவச கூப்பன்களை வழங்கும் அடையாளமாக 10 மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் புத்தகங்களை வழங்கி, பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுடன் செல்பி புகைப்படம் எடுத்துக்கொண்டு, மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பில், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், மீண்டும் மஞ்சப் பைகளை வழங்கினார்.

முன்னதாக, கலைப்பண்பாட்டு துறையின் சார்பில் ஆண்டவன் குழுவினரால் நடத்தப்பட்ட மங்கள இசை மற்றும் கோவை மின்னல் கிராமிய கலை குழுவினரால் நடத்தப்பட்ட தப்பாட்ட நிகழ்ச்சியினை பார்வையிட்டார்.

அதனை தொடர்ந்து பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. பிற்பகலில் மதுரை வி.ராமகிருஷ்ணன் அவர்கள் ‘எண்ணித் துணிக கருமம்” என்;ற தலைப்பில் சிறப்புரை ஆற்றவுள்ளார்கள்.

புத்தக திருவிழாவில் மரபின் மைந்தன் மா.முத்தையா அவர்கள் ‘வெற்றி சிறகுகள் விரியட்டும்”; என்ற தலைப்பில் சிறப்புரையாற்ற உள்ளார்கள். பிற்பகல் நடைபெறும் நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் நாதன் அவர்கள் ‘வாசிப்பு எனும் இறகு” என்ற தலைப்பில் சிறப்புரையாற்ற உள்ளார்கள். மேற்கண்ட நிகழ்ச்சிகளை கல்வித்துறையின் சார்பில் ஒருங்கிணைக்கப்படுகிறது.

இவ்விழாவில், உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி என்.எஸ்.நிஷா, மாவட்ட வன அலுவலர் கௌதம்,(நீலகிரி வனக்கோட்டம்), துணை இயக்குநர் (முதுமலை புலிகள் காப்பகம்) வித்யாதர், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், குன்னூர் சார் ஆட்சியர் செல்வி சங்கீதா, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) மரு.ஜெயராமன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி லோகநாயகி, வருவாய் கோட்டாட்சியர்கள் டினு அரவிந்த் (உதகை) குணசேகரன் (கூடலூர்), தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் திருமதி ஷிபிலா மேரி, சமூக பாதுகாப்பு திட்டம் (தனித்துணைஆட்சியர்) ராதாகிருஷ்ணன்,

மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி பிரவீணா தேவி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சதானந்த் கல்கி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) நந்தகுமார், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பீட்டர் ஞானராஜ், உதவி ஆணையர் (கலால் (பொ)) ,பழனிச்சாமி, நகர் மன்ற தலைவர்கள் திருமதி வாணீஸ்வரி (உதகை), திருமதி பரிமளம் (கூடலூர்), துணைத்தலைவர்கள் ரவிக்குமார் (உதகை), உமாநாத் (கோத்தகிரி), நகராட்சி ஆணையாளர் கணேஷ், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ரமேஷ், மாவட்ட நூலக அலுவலர் கிளமெண்ட், திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

### தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

## மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம் !

**தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு, தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை விழுப்புரம் தெற்கு மாவட்ட அமைப்பாளர்- துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**விழுப்புரம் தெற்கு மாவட்டம்**

தலைவர் - ஜி. வினோபா 41/122, செவலை ரோடு, திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணைத் தலைவர் - ஜி. வல்லபன் 36, தென்னமாதேவி, டி. மேட்டுப்பாளையம் மற்றும் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

அமைப்பாளர் - காசி. கலைச்செல்வன் 41எப், காமராஜர் தெரு, வி. சாலை மற்றும் அஞ்சல், விழுப்புரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர். ராஜ்மோகன் மண்டகமேடு, இளந்துரை மற்றும் அஞ்சல், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 2) பெ. பாரதி காமாட்சி அம்மன் கோவில் தெரு, தி. கொசப்பாளையம், அன்னியூர் மற்றும் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம். 3) சிவ. ஏழுமலை 3/27, வடக்கு தெரு, செம்மார் அஞ்சல், திருவெண்ணெய்நல்லூர் வட்டம் - 607109, விழுப்புரம் மாவட்டம். 4) ரா. ஞானவேல் 1/4, நடுத் தெரு, டி. அத்திவாக்கம், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 5) சி. அண்ணாதுரை சித்தேரி மெயின் ரோடு, சித்தேரி போரூர் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 24-10-2025.

**வாகை சந்திரசேகர்**
தலைவர்,
தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

---



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கிய, இந்த ஆண்டிற்கான நாகூர் தர்கா பெரிய ஆண்டவர் கந்தூரி சந்தனக்கூடு திருவிழாவிற்கு தமிழ்நாடு அரசு 45 கிலோ சந்தனக்கட்டைகளை கட்டணமின்றி வழங்குவதற்கான அரசாணையினை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் நாகூர் தர்கா தலைமை அறங்காவலர் செய்யது முகமது காஜி ஹுசைன் சாஹிப், நாகூர் தர்கா தலைவர் மற்றும் பரம்பரை அறங்காவலர் காஜி செய்யது முகமது கலிபா சாஹிப் காதிரி ஆகியோர் நேற்று முன்தினம் (24.10.2025) காண்பித்து, நன்றி தெரிவித்தனர். இந்நிகழ்வின்போது அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் உடனிருந்தார்.

# சேந்தமங்கலம் - கழக சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி இறுதிச் சடங்கு!

## 30 குண்டுகள் முழங்க அரசு மரியாதையுடன் உடலடக்கம்!



நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கு.பொன்னுசாமி அவர்களின் இறுதிச் சடங்கு நேற்று முன்தினம் (24.10.2025) கொல்லிமலையில் உள்ள அன்னாரது தோட்டத்தில் காவல்துறையினர் 30 குண்டுகள் முழங்க அரசு மரியாதையுடன் அன்னாரின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்நிகழ்வில், அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி., வி.எஸ்.மாதேஸ்வரன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம், ஈ.ஆர்.ஈஸ்வரன், நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் துர்காமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

*நாமக்கல், அக். 26 -*

மறைந்த சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி இறுதிச் சடங்கில் காவல்துறையினர் 30 குண்டுகள் முழங்க அரசு மரியாதை செலுத்தினர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டம் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே. பொன்னுசாமீ உடல் நலக் குறைவால் 23.10.2025 அன்று காலை 7.30 மணி அளவில் காலமானார்.

கு.பொன்னுசாமி அவர்கள் மறைவெய்தியதை யொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி வெளியிட்டார்.

சேந்தமங்கலம் வட்டம், நடுக்கோம்பை ஊராட்சி, புளியங்காடு கிராமத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அன்னாரது உடல் வைக்கப்பட்ட அவரது இல்லத்திற்கு நேரில் சென்று இறுதி அஞ்சலி செலுத்தி, அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

மேலும் அமைச்சர்கள் எ.வ.வேலு, ஆர்.ராஜேந்திரன், எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மருத்துவர் மா.மதிவேந்தன், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் மேற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.எம்.செல்வகணபதி, வி.எஸ்.மாதேஸ்வரன், மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, மேயர் து.கலாநிதி ஆகியோர் மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து, சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கு.பொன்னுசாமி அவர்களது உடல் சேந்தமங்கலம் வட்டம், நடுக்கோம்பை ஊராட்சி, புளியங்காடு கிராமத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மறைந்த சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கு. பொன்னுசாமி அவர்களின் இறுதிச் சடங்கு நேற்று முன்தினம் (24.10.2025) கொல்லிமலையில் உள்ள அன்னாரது தோட்டத்தில் காவல்துறையினர் 30 குண்டுகள் முழங்க அரசு மரியாதையுடன் அன்னாரின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில், அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் (நாமக்கல்), ஈ.ஆர்.ஈஸ்வரன் (திருச்செங்கோடு), நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் துர்காமூர்த்தி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில மாணவரணி துணை செயலாளர் வீரமணி,

முன்னாள் மத்திய இணை அமைச்சர் செ. காந்தி செல்வன், நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, துணை மேயர் பூபதி, நகர செயலாளர் என்.ஆர்.சங்கர், ராணா ஆனந்த் சிவக்குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் அசோக்குமார், கே.பி.இராமசுவாமி, செந்தில்முருகன், நவலடி, ஜெகநாதன், ஆர்.எம்.துரைசாமி, எம்.பி.கௌதம், ஜெயக்குமார், கே.பி.ஜெகநாதன், கே.பி.ராமசுவாமி, பாலசுப்பிரமணியம், பேரூர் கழக செயலாளர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

### தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை

## சென்னை தென்மேற்கு மாவட்டம்

## தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி அமைப்பாளர் நியமனம்

**தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு**

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்கு பகுதி கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் மாதவன் அவருக்கு பதிலாக **க. செல்வராஜ்** (15/8, 6வது தெரு, அசோக் நகர், சென்னை - 600083) அவர்கள் சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்கு பகுதி கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 24-10-2025.

**வாகை சந்திரசேகர்**
தலைவர்,
தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

---



நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், மாவட்ட நிர்வாகம், பொது நூலகத்துறை மற்றும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர், பதிப்பாளர் சங்கம் இணைந்து நடத்தும் 4வது புத்தகத் திருவிழாவினை, அரசு தலைமைக்கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், 24.10.2025 அன்று திறந்து வைத்து புத்தக அரங்குகளை பார்வையிட்டார். உடன் உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.



தஞ்சாவூர் மத்திய மாவட்டம், நல்லிச்சேரியைச் சேர்ந்த மலையப்பன் என்ற கழக மூத்த முன்னோடி மூளை நரம்பியல் பிரச்சினைக்கு மருத்துவ உதவிக்கு நிதி உதவி வேண்டி கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் கோரிக்கை வைத்திருந்தார். அவரின் கோரிக்கையை ஏற்று திமுக இளைஞரணி அறக்கட்டளையின் சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கிய 25,000ரூ காசோலையை மாவட்ட கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, மலையப்பனுக்கு வழங்கினார். நிகழ்வில் ச.முரசொலி எம்.பி, க.முகில் வேந்தன், எஸ்.ஆர்.எஸ்.செந்தமிழ்செல்வன், எம்.எஸ்.வெங்கடேசன், வாசிம் ராஜா, மதிபாலன், ராமநாதன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.